ஆணையாளர் சபையின் உறுப்பினர்கள் தேவைக்கமைவாக ஒரு மாதத்திற்கு ஒருமுறை கூடுவதுடன், அதன்போது அன்றாட நடவடிக்கைகளை ஆய்விற்கு உட்படுத்தி மிகவிசேடமான கொள்கை முறையிலான தீர்மானங்களை மேற்கொள்ளப்படும். மேலும் ஆணையாளர் சபை உறுப்பினர்களால் தாபனத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு ஏற்புடையதான தந்திரோபாய வழிமுறைகளையும் தீர்மானிக்கப்படுகிறது.

பொறுப்பு

1. தாபனத்தின் பலம், வினைத்திறன் மற்றும் இடர் என்பவற்றை கருத்தில்கொண்டு வியாபார மூலோபாயங்களை தயாரித்தல்
2. மேற்படி மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்
3. தற்போதுள்ள முறைமையில் செயற்பாடுகளுக்கு ஏற்புடையதாக இடர் முகாமைத்துவம், உள்ளக நிருவாகம், நெறிமுறைகள், தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் நியதிச்சட்டங்களுக்கு ஒழுங்கமைவதற்கு பொறுப்பு கூறுதல்
4. மூலதன செலவுகளின் அவதானிப்புகள், மேற்பார்வையிடல் மற்றும் மீளாய்வுகளை மேற்கொள்ளுதல்
5. சிரேஷ்ட முகாமைத்துவத்தின் செயலாற்றுகைக் கண்காணிப்பு.
6. தகவல் முறைமை மற்றும் கணக்காய்வு செயற்பாட்டைப் பயனுள்ளவாறு நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பாக இருத்தல்.

சுயாதீன தீர்ப்பு

ஆணையாளர் சபையின் செயற்பாடுகளின்போது ஒவ்வொரு ஆணையாளர்களும் தமது சுயாதீன கருத்தை வெளிப்படுத்த வேண்டுமென்பதுடன், ஏனைய தரப்புகளின் சட்ட விரோதமான செல்வாக்கு அல்லது பாதகமான தாக்கங்களுக்கு உட்படுதலாகாது.

தலைவர்

தலைவர் அவர்களின் கடமைப்பொறுப்புகளைத் தெளிவாக விளக்கமளிக்கப்பட்டு பிரித்து காண்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன்மூலம் நிறுவனத்தினுள் அதிகார சமநிலைப்படுத்தலை

தலைவர் அவர்களின் கடமைப்பொறுப்பு

ஆணையாளர் சபைக்கு தலைமைத்துவம் வழங்குதல், மூலோபாயங்கள் தொடர்பான வழிகாட்டல், எல்லா வகையிலுமான

ஆணையாளர் சபை நியமனம் செய்தல்

ஆணையாளர் சபை நியமனம் செய்கின்ற நடைமுறை மிக தெளிவானதாகவும், வெளிப்படைத்தன்மையுடன் கூடியதாகவும்

மூலோபாயங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளுதல், மூலோபாயங்களை அமுல்படுத்தல், செயலாற்றுகையின் மீளாய்வு, வளங்களை விநியோகித்தல் மற்றும் வியாபார நெறிமுறைகளை பேணுதல் போன்ற நடவடிக்கைகளின் பொருட்டு ஆணையாளர்கள் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

உறுதிப்படுத்துவதற்கு இயன்றுள்ளமையால், நபர்களின் சுய விருப்பம் பிரகாரம் தீர்மானமெடுக்கம் தன்மை வரையறுக்கப்பட்டுள்ளது.


கூட்டங்களை தொழில்சார் முறையில் நடைமுறைப்படுத்தல் என்பன தலைவர் அவர்களால் மேற்கொள்ளல் வேண்டும்.

உள்ளதுடன், அதனைச் சம்பந்தப்பட்ட கட்டளைச் சட்டத்தின்படி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் மற்றும் பிரசித்தப்படுத்தல்

29.02.2024 ஆந் திகதி கணக்காய்வினை செய்வதற்காக, 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் தொகுப்பு, பின்வரும் நிறுவனங்களுக்கு பிரதிகளுடன், கணக்காய்வாளர் தலைமை அதிபதி, தேசிய கணக்காய்வு அலுவலகம், பொல்துவ வீதி, பத்தரமுல்லை என்ற முகவரியின். அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் தொகுப்புக்கான தாள் இலக்கம் BP/OTH/12/2024 27.02.2024 ஆம் திகதி நடைபெற்ற ஆணையார்கள் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.



Telephone 011-2685752/3
Fax 011-2691261
Your No.
My No LLDF/FS/2023

රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
පොදු நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமை
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Governme

දේශීය ණය සහ සංවර්ධන අරමුදල
உள்ளூர்கடன், அபிவிருத்திநிதியம்
Local Loans & Development Fund

24 ඒ, වෙස්ඩ් පෙදෙස, කොළඹ 07
24අ, வோர்ட் பிளேஸ், கொழும்பு - 07
24A, Ward Place, Colombo 07, Sri Lanka.

28.02.2024

Auditor General
National Audit Office
Polduwa Road
Battaramulla

29 FEB 2024

Dear Sir,

FINANCIAL STATEMENTS FOR THE YEAR ENDED 31st DECEMBER 2023

We forward herewith Financial Statements for the year ended 31st December 2023 of Local Loans and Development Fund for the Audit purpose.

This set of Financial Statements has been prepared after consideration of the audit observations and impairment adjustments given by you in previous audit.

The set of financial statements were approved by the meeting of the Board of Commissioners of Local Loans and Development Fund held on 27th February 2024. The signed meeting minutes of the Board of Commissioners will be forwarded you at our earliest.

Thank You,

Yours faithfully,

K.D.Chithrapala
Director/ Chief Executive Officer
Local Loans & Development Fund.

K.D. Chithrapala
Director / Chief Executive Officer
Local Loans and Development Fund

c.c.- 1. Director General, Department of Public Enterprises, Ministry of Finance
2. Director General, Department of Public Finance, Ministry of Finance
3. Director General, Corporate Affairs Division, Ministry of Finance
4. Superintend of Audit, Government Audit Branch, State Ministry of, Provincial Councils and Local Government

மனித வள விவரக்குறிப்பு

உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மனித வளங்கள் முக்கியமாக 02 பகுதிகளாகும்.

- ஆணையாளர் சபை
- அங்கீகரிக்கப்பட்ட பதவியணி

2023.12.31 ஆம் திகதியில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் ஆணையாளர் சபை

தலைவர்

.

01 திரு.கே.டீ.என்.ரன்ஜித் அசோக
செயலாளர்,
பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
மன்றங்கள் அமைச்சு



திறைசேரி பிரதிநிதித்துவம்

02. திருமதி.ஜீ.கே.எல்.சந்திரசேகர -
பிரதிப் பணிப்பாளர், வெளிநாட்டு வளங்கள்
திணைக்களம், நிதி பொருளாதார
உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை
அமைச்சு



உறுப்பினர்கள்





03. திரு.ஜீ.எச்.எம்.ஏ.பிரேமசிங்க
பிரதான செயலாளர் (மத்திய மாகாணம்)

04. திரு.சீ.ஜே.எம்.ஜீ.சீ.பண்டார பிரதான செயலாளர் (வட மத்திய மாகாணம்)





05. திருமதி.தமயந்தி பரணகம பிரதான செயலாளர்
(ஊவா மாகாணம்)

06. திரு.மஹிந்த எஸ். வீரசூரிய
பிரதான செயலாளர் (சப்ரகமுவ மாகாணம்)





07. தஆர்.எம்.பீ.எஸ்.ரத்நாயக்க
பிரதான செயலாளர் (கிழக்கு மாகாணம்

08.
திரு.கே.எம்.எச்.எஸ்.கே.ஜயலத்
உள்:ராட்சி ஆணையாளர் (வடமேல் மாகாணம்)



09. திரு.டப்.வீ.பிரதீப் யசரத்ன பிரதான செயலாளர் மேல் மாகாணம



10. திருஸ்.குகதாஸ் பிரதி பிரதான செயலாளர் (வட மாகாணம்)



11. திரு.ரனில் விக்கிரமசேகர உள்:ராட்சி ஆணையாளர(தென் மாகாணம்)



12.
திரு.கே.பீ.எல்,ஏ.காரியவசம் கௌரவ அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் (சீதாவக்க பிரதேச சபையின் முன்னால் தலைவர்



13. திருதென்னகோன் ருசிரிபால கௌரவ

(இலங்கை வங்கியின் முன்னால் தலைவர்



14. திரு.ஏ.பி.ஹேரத் கௌரவ அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் (முன்னால் நிர்வாக சேவை உறுப்பினர்

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் பணியாற்றொகுதி

பதவி	2023.12.31 ஆம் திகதியில் உண்மையான பதவியணி	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	வெற்றிடங்கள்
பணிப்பாளர்	1	1	-
பிரதிப் பணிப்பாளர் (நிதி மற்றும் நிருவாகம்)	1	1	-
பிரதிப் பணிப்பாளர் (தொழிற்பாட்டு)	1	1	-
உதவி கணக்காளர்	1	1	-
உள்ளக கணக்காய்வு அலுவலர்	-	1	1
நிருவாக அலுவலர்	1	1	-
அபிவிருத்தி அலுவலர்	17	25	8
முகாமைத்துவ உதவியாளர்	7	11	4
சாரதி	2	2	-
அலுவலக பணியாளர்	2	2	-
மொத்தம்	**33**	**46**	**13**

இயலளவு அபிவிருத்தி (பயிற்சியளித்தல்) – SKILLS DEVELOPMENT

உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் தொடர்பான பணிகளைச் செய்வதில் மனித வளங்களின் திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்த பயிற்சி மிகவும் உதவியாக உள்ளது. எனவே, இந்த நிறுவனத்தின் மனித வளமானது, இலங்கையின் உயர் பயிற்சி நிறுவனமான திறன் மேம்பாட்டு நிதியத்தின் (SDFL) பயிற்சித் திட்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் அலுவலர்கள் கலந்து கொள்ளும் பயிற்சி நிகழ்ச்சிகள்

- வருடாந்த பொருட் கணக்கெடுப்பு மற்றும் சொத்து கைதவிர்ப்பு
- உள்ளக கணக்காய்வும் உள்ளக கட்டுப்பாடும்

நிர்வாக அறிக்கை

ஆணையாளர் சபை கூட்டங்கள்

1993 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி சட்டத்தின் இரண்டாம் உப பிரிவின் பிரகாரம் ஆணையாளர் சபை கூட்டங்கள் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு கூட்டமேனும் நடாத்தப்பட வேண்டும்

உள்ளடக்கம்

- ஆணையாளர் சபை
- பதவியணி உத்தியோகத்தர்

ஆணையாளர் சபை கூட்டங்களில் கண்டிப்பாக கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

- சபையின் முந்தைய அறிக்கையை ஏற்றுக்கொள்வது
- கடந்த கூட்டத்தின் அறிக்கையிலிருந்து எழும் விஷயங்களைப் பற்றிகலந்துரையாடுதல்
- கடந்த கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின தற்போதைய முன்னேற்றம்
- மாதாந்த கணக்கு அறிக்கைகள் மற்றும் நிதி நிலைமைக் கூற்று
- கடன் விண்ணப்பங்களை பரிசீலித்தல்
- நிர்வாக விடயங்களைப் பற்றி விவாதித்தல்
- ஏனைய விடயங்களின் விவாதம்
- அடுத்த ஆணையாளர் சபைக் கூட்டத்தின் திகதியை தீர்மானித்தல்

2023 ஆம் ஆண்டில் ஆணையாளர் சபை கூட்டங்கள் நடைபெற்ற திகதிகள்

i. 2023 பெப்ரவரி 24 பி.ப 3.00 மணி
ii 2023 மே 26 பி.ப 4:00 மணி
iii 2023 ஜூன் 16 பி.ப 3:00 மணி (விசேட கூட்டம்)
iv. 2023 ஆகஸ்ட் 31 பி.ப 4.30 மணி
v. 2023 செப்டம்பர் 19 பி.ப 6:00 மணி
vi. 2023 ஒக்டோபர் 27 பி.ப 4.00 மணி
vii. 2023 நவம்பர் 30 பி.ப 4.30 மணி
viii. 2023 திசெம்பர் 28 பி.ப 3.00 மணிக்கு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை - 2023

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 41 ஆம் பிரிவு பிரகாரம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை தாபிக்க வேண்டுமென்பதுடன், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு பிரதான கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரின் பொறுப்புகளுக்கு உட்படுவார்கள். 2010.12.14 ஆம் திகதிய அரச பொது முயற்சி சுற்றுநிருப பீ.ஈ.டீ.:.55 பிரகாரம் உள்;ர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் ஆணையாளர் சபையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிறைவேற்று தரத்தில் அல்லாத இரண்டு பணிப்பாளர்கள் மற்றும் அமைச்சின் உள்ளக கணக்காய்வாளர் அடங்கலாக மூன்று பேர்களைக் கொண்டு கணக்காய்வு குழு அமைந்துள்ளது. ஆணையாளர் சபையை பிரதிநிதித்துவப் படுத்தும் பொது திறைசேரி பிரதிநிதியாளர் அதன் தலைவராகவும், கணக்காய்வாளர் திணைக்களத்தின் பிரதிநிதியாளர் அவதானிப்பாளராகவும் பங்குபற்றுவார்கள். உரிய ஆண்டில் 4 முறைகள் குழு கூடியதுடன், ஒவ்வொரு காலாண்டுக்கும் ஒரு முறை குழு கூடுகின்றது.

(01) 2022 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்கள்

2022 ஆம் ஆண்டில் இறுதகி கணக்குகள் மீளாய்வு மற்றும் அவதானிப்புக்கள் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(02) 2022 ஆம் ஆண்டில் விரிவான கணக்காய்வாளர் அதிபதி அறிக்கையின் ஆய்வு

2022 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்கள் அடங்கலாக அதன் நடவடிக்கைகள் தொடர்பாக தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட எழுந்துள்ள விடயங்களை செவ்வையாக்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய விரிவான கணக்காய்வு அறிக்கை மீளாய்வுக்குட்படுத்தியதுடன், அதன் மூலம் நடைமுறைகளை நிறுவனத்திடம் முன்வைக்கப்பட்டது.

(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்காத வகையில் பதில் கடமையாற்றும் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர் ஆகியோருக்கு சம்பளம் மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு செலுத்தல்

இந்த நிறுவனத்தில் முன்னாள் பதில் கடமையாற்றிய பணிப்பாளர் ஒருவரான கணக்காளர் சேவையின் அலுவலரான எஸ்.ஏ.என். ஆர்.திரு.சுபசிங்க அவர்களால் சட்டங்கள் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு முரணாக 2016-2015 ஆண்டுகளில் பெறப்பட்டுள்ள சம்பளம் மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு தொடர்பிலான புலனாய்வு பணிகளை விரைவாக முடிவுறுத்துவதற்கு தேவையான ஆலோசனை வழங்குதல.

(ஆ) நிதிசார் / நிருவாக மற்றும் மனித வளங்களின் கையேடுகளை தயாரித்தல்.

உள்ளூர் கடன் மற்றும் மேம்பாட்டு நிதியித்தினால் தயாரிக்கப்பட்ட நிதி மற்றும் மனித வள நடைமுறைக் குறியீட்டின் தரத்தை சரிபார்த்து, ஆணையாளர் குழுவிற்கு பரிந்துரை வழங்க எடுக்கப்பட்டு தீர்மானததின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவால் பின்வரும் பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன.

i) நிதி மற்றும் மனித வள கையேடுகளை தயாரிப்பதன் முதன்மை நோக்கம் யாதெனில், சம்பந்தப்பட்ட பதவியணிக்கு அவர்களின் நிதி மற்றும் மனித வளங்களை முகாமைத்துவம் செய்வதற்காக அவர்களின் பொறுப்பு, நிதிசார் கட்டமைப்பு மற்றும் நடைமுறைகளை புரிந்து கொள்வதற்கு உதவுவதாகும்.ஆயினும், இந்த கையேடுகளை தயாரிக்கும்போது, இந்த அடிப்படை நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை என்பதுடன், ஒரு கையேட்டில் இருக்க வேண்டிய அந்தந்த பணிகள் / செயற்பாடுகள் தொடர்பில் சம்பந்தப்படும் அலுவலர் மற்றும் பொறுப்புகளை தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன், குறித்த கையேடுகள் ஆணையாளர் சபையிடம் பரிந்துரைக்கும் தரத்தில் தயாரிக்கப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

ii) இந்த கையேடுகளை பயன்படுத்துபவர்கள் எளிதில் புரிந்துக்கொள்ளும் வகையில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன், செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவைகள் தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். ஆனால் இந்த கையேட்டில் நடைமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் சிக்கலானதாகவும், தவறாகவும் இருப்பதை அவதானிக்கப்படுகிறது.

iii) அதன்படி, இந்த கையேடுகளை மீண்டும் தயாரித்து ஆணையாளர் சபையிடம் சமர்ப்பிப்பதற்கு முன்மொழியப்பட்டது.

(இ) SLFRS 9 இன்படி இழப்பீட்டு பெறுமதிகளை சீராக்குதல்.

உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2022 ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்கைகளில் உள்ள கடன் இழப்பீட்டு சீராக்குதல் தொடர்பில் பின்பற்றியுள்ள மொடலானது, இலாபத்தை நோக்கமாக கொள்ளாத, உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் போன்ற நிறுவனங்களுக்கு சீராக்க இயலாது என்று கணக்காய்வாளர் அதிபதியால் சுட்டிக்காட்டப்பட்டதுடன், குறித்த காரணத்தால் உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு பொருத்தமான படிவமொன்றை நிருமாணிப்பதற்கு முன்னணி பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த உரிய மொடல் தயாரிக்கும் பணியின் முன்னேற்றம் மீளாய்வு செய்தல்.

(ஈ) உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியால் பராமரிக்கப்படும் கணினிகள் மென்பொருள் அமைப்பு

தற்போது நறளை நிறுவனத்தால் தாபிக்கப்பட்டுள்ள கடன் தகவல்கள் மற்றும் நிதிசார் முகாமைத்துவ கட்டமைப்பின் தரவுகளில் செவ்வைத்தன்மை தொடர்பில் 2022 கணக்காய்வாளர் அதிபதி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்த நிறுவனத்திடம் புதிய கணினி கட்டமைப்பை தாபிக்கும் அவசியம் குறித்து சுட்டிக்காட்டப்பட்டதுடன், துரிதமாக இந்த கணினி அமைப்பை தயாரிப்பதற்கு வழிகாட்டுதல் மற்றும் அறிவுரை வழங்குதல்.

(03) 2022 ஆம் ஆண்டின் ஆண்டு அறிக்கை

2022 ஆம் ஆண்டில் ஆண்டு அறிக்கை பாராளுமன்றத்திடம் சமர்ப்பிப்பதற்கு தேவையான வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்குதல்.

(04) பிரமானங்கள், நிபந்தனைகள், சட்டதிட்டங்கள் மற்றும் சுற்றுநிருபங்களுடன் இணங்குதல்

இணைந்த திட்டங்களை தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கியதுடன், 2023 ஆம் ஆண்டில் நிதிசார் அதிகாரங்கள் நி.ஒ.விதி 135 இன்கீழ் கையளிப்புகள் தொடர்பாக ஆணையாளர் சபை அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டது.

(05) முறைமைகள் மற்றும் நிருவாக முறைகளின் விளைவுத்திறன்

வரவு செலவு அட்டவணை, நிருவாக முறைமையாக செயற்படுத்துவதற்கு நிருவாக அதிகாரத்திடம் ஆலோசனை வழங்கப்பட்டது. அதேபோன்று கடன் அறவிடும் செயற்பாட்டினை அவதானித்து ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரதான நிறைவேற்று அலுவலரிடம் ஆலோசனை வழங்கப்பட்டது.

06. ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மற்றும் பதவி உயர்வு திட்டங்களை திருத்தம் செய்தல்

இந்த நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டங்களை திருத்தம் செய்து உரிய அனுமதிகளை துரிதமாக பெற்றுக்கொள்வதற்கு தேவையான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்குதல

07. நிலுவைக் கடனை அறவிடுதல்

செயலற்ற நிலையில் உள்ள கடன் தொகை அறவிடுவதற்கு உள்;ர் அதிகார சபை நிறுவனங்களுடன் கலந்துரையாடப்பட்டு, அந்த நிறுவனங்களுக்கு செலுத்த முடியுமான தவணை தொகைக்கு கடன் தொகையை மீளமைக்கப்பட்டு அறவிடுவதற்கும், மாகாண மட்டத்தில் சமர்ப்பித்து அதற்கு முன்னிலை வழங்கப்பட்டு கலந்துரையாடுவதற்கும் இல்லாவிட்டால் சட்டத்துடனான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஆணையாளர் சபையிடம் சமர்ப்பிப்பதற்கு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

(08) கணக்காய்வாளர் தினைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு உசாவுதல்கள் 2023

கணக்காய்வு உசாவுதலில் சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு செவ்வையாக்குவதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

(09) நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

நிலைபேண்தகு அபிவிருத்தி சட்டம்மூலம் 17 பிரதான நோக்கங்களை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவற்றில் நிறுவனத்திற்கு மிக பயனுள்ள நோக்கங்களை அடையாளம் காணப்பட்டு, அந்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக நிறுவனத்தின் மொத்த பதவியணிக்கும் மூீஜ தயாரித்து, உரிய மதிப்பீட்டு முறை தயாரித்தல் வேண்டுமென சுட்டிக் காட்டப்படுதல்.

2023 ஆம் **ஆண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் உறுப்பினர்கள்**

திருமதி.டப்.ஜீ.கே.எல்.சந்திரசேகர	திறைசேரி பிரதிநிதித்துவம்	தலைவர்
திரு.பிரதீப் யசரத்ன	பிரதான செயலாளர், மேல் மாகாணம்	உறுப்பினர்
திரு. ஏ.பி.ஹேரத்	கௌரவ அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட ஆணையாளர் சபையின் உறுப்பினர்	உறுப்பினர்
திருமதி. எம்.டீ.ஈ.எஸ்.வாஸ்	தேசிய கணக்காய்வு அலுவலகம்	அவதானிப்பாளர்
திருமதி ஹிரோசீமா நவரத்ன	பிரதான உள்ளக கணக்காய்வாளர், பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, (மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவு)	அழைப்பாளர்

உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் குழு

கடன் குழுவானது ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கும், அதில் மூன்று நிர்வாக சபை உறுப்பினர்கள் மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் மற்றும் இரண்டு சுயேச்சையான நிர்வாகமற்ற உறுப்பினர்களை வரிசை அமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களால் பரிந்துரைக்கப்படுவார்கள். ஆணையர்கள் குழு நிரந்தரத் தலைவரை நியமிக்கவில்லை என்றால், தற்போதைய குழுவின் உறுப்பினர்களில் இருந்து கடன் குழுவின் தலைவர் நியமிக்கப்படலாம். கிரெடிட் கமிட்டியின் கூட்டங்களுக்கான கோரம் மூன்று உறுப்பினர்களாக இருக்க வேண்டும், அவர்களில் குறைந்தபட்சம் ஒரு உறுப்பினர் நிறைவேற்று அல்லாத உறுப்பினராக இருக்க வேண்டும். ஆணையாளர் குழுவின் தீர்மானத்தால் கடன் குழு நிறுவப்பட்டதுடன், உள்ளூர் கடன் மற்றும்அபிவிருத்தி நிதியத்தின் கடன் செயல்பாடுகளின் சில அம்சங்களை மேற்பார்வையிடும் பொறுப்பு ஆணையாளர் குழுவால் ஒப்படைக்கப்பட்டது.

கடன் குழுவில் உறுப்பினர்களாக இல்லாத உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் இயக்குனர் தேவைப்படும் போதெல்லாம் குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். திட்டமிடப்பட்ட சபை கூட்டத்திற்கு முன், கடன் குழு ஒரு வருடத்தில் குறைந்தது 12 முறை கூட வேண்டும்.

குறிக்கோள்கள் மற்றும் பொறுப்புகள்

- கடன் வழிகாட்டுதல்கள் மற்றும் முக்கிய கடன் கொள்கைகளுக்கு தேவையான திருத்தங்களை தயாரித்து அவற்றை செயல்படுத்து வதற்கு அங்கீகாரம் அளித்தல்.
- இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பரந்தளவிலான பாதுகாப்பு வழங்குவதற்காக கடன் வழங்கும் வசதிகளை விரிவுபடுத்துதல்.
- கடன் நடைமுறைகளை எளிதாக்குதல் மற்றும் அதன் மூலம் கடன் வழங்கலின் செயல்திறனை மேம்படுத்துதல்.
- கடன் தரம், இடர்முகாமை மற்றும் கொள்கை நடைமுறைகளைப் பின்பற்றுதல் பற்றிய அறிக்கைகளைப் பெற்று மீளாய்வு செய்தல்

கடன் குழுவின் செயல்பாடுகள்

- கடன் ஆணையாளர் சபை அவ்வப்போது கடன் குழு மீது விதிக்கக்கூடிய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு. கடன் அபாயத்தை பராமரித்தல்
- ஒவ்வொரு திட்டத்திற்கும் கடன் விண்ணப்பங்களின் பரிசீலனை மற்றும் அங்கீகாரமளித்ததல்
- கடன் விண்ணப்பத்துடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களையும் பெற்றுள்ளதை உறுதி செய்தல்.
- கடன் இடர் முகாமை கொள்கைகளை மீளாய்வு செய்து பரிந்துரைத்தல்.
- கடன் இடர் முகாமை கொள்கைகள், பொருந்தக்கூடிய நியமங்கள், நடைமுறைகள் மற்றும் கடன் தீர்மானங்கள் தொடர்பான கட்டுப்பாட்டு சூழல் ஆகியவற்றின் பயன்பாட்டின்
- கடன் திருப்பி செலுத்த தவறிய வாடிக்கையாளர்களை விசாரிக்க.
- செயல்திறனை மதிப்பாய்வு செய்து கண்காணிக்கவும்.
- டன்களைக் கண்டறிதல், மதிப்பீடு செய்தல், நிர்வகித்தல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றிற்காக ஆணையாளர் குழுவால் நிறுவப்பட்ட அமைப்புகள் வடிவமைக்கப்பட்டு திறம்பட செயல்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தவும்.
- கடன் விண்ணப்பங்கள் மற்றும் அனைத்து ஆதார ஆவணங்களையும் மதிப்பாய்வு செய்து மதிப்பீடு செய்து கடன் குழுவிற்கு பரிந்துரைகளை வழங்கவும்.
- கடன் மீட்பு செயல்முறைகளில் உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு உதவுதல்.

கடன் குழுவின் அறிக்கையிடல் நடைமுறை

கடன் குழுவின் செயலாளர் உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் சபை செயலாளராக இருப்பார். குழுவின் செயலாளர் பின்வரும் அறிக்கைகளை பராமரிப்பார்

- கூட்டங்களை கூட்டுவதற்கான அறிவிப்புகள்.
- உறுப்பினர்களின் வருகையை பதிவு செய்ய வேண்டும்.
- கடன் குழுவின் அனைத்து கூட்டங்களின் உறுதிப்படுத்தப்பட்ட குழு ஆவணங்கள்.
- அனைத்து நகல்களும் கடன் குழுவால் ஆணையாளர் சபைக்கு எழுத்து மூலமாக சமர்ப்பிக்கப்பட்டது.
- கடன் குழுவின் தற்போதைய உறுப்பினர்கள் பற்றிய தகவல்கள் மற்றும் கடன் குழுவில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால் அறிக்கைகள்.
- கடன் குழுவின் அங்கீகாரம் மற்றும் பரிந்துரைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து கடன் குழு ஆவணங்களும்.

கடன் குழுவின் அமைப்பு

தலைவர் **திரு. தென்னகோன் ருசிருபால** (கௌரவ அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்)

அங்கத்தவ்ரகள்

- **திருமதி.ஜீ.கே.எல்.சந்திரசேகர** - (பிரதிப் பணிப்பாளர், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சு)
- **திரு.கே.எம்.எச்.எஸ்.கே.ஜயலத்** (உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் வடமேல் மாகாணம்)
- **திரு.டப்.வீ.பிரதீப் யசரத்ன** (பிரதான செயலாளர் மேல் மாகாணம்)
- **திரு.மஹிந்த எஸ். வீரசூரிய** (பிரதான செயலாளர் (சப்ரகமுவ மாகாணம்)

நிதி மற்றும் நிதி கட்டுப்பாட்டு உபாயங்கள்

- ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் ஏற்றுக்கொள்வது.
- மாதாந்த வங்கி ,ணக்கங்களைத் தயாரித்தல்.
- செலவு பேரேடுகளை பராமரித்தல்.
- மாதாந்த அறிக்கைகளைத் தயாரித்தல்.

நிதிக் கூற்றுக்களின் நோக்கங்கள்

இலங்கை நிதிக் கூற்றுக்கள் கணக்கீட்டு நியமங்கக்கு இணங்க தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் நோக்கம், 31.13.2023 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் பயன்படுத்துவோருளுக்கு உள்ளுர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் எனப்படும் அறிக்கையிடல் நிறுவனத்தைப் பற்றிய நிதித் தகவல்களை வழங்குவதாகும்.

நிதிக் கூற்றுத் தொகுதிகளின் அறிமுகம்

01.01.2023 இல் தொடங்கி 31.12.2023 ஆந் திகதி முடிவடையும் நிதியாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் தொகுப்பில் பின்வருவன அடங்கும்.

01. விரிவான வருமானக் கூற்று,
02. நிதி நிலைமைக் கூற்று
03. உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று
04. காசுப் பாய்ச்சல் கூற்று
05 கருத்திற் கொள்ளக் கூடிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றம் ஏனைய விரிவான தகவல்களின் பொழிப்புக்களின் குறிப்பு பதிவுகள்

.

கணக்காய்வு அறிக்கை

பீஏஎப/டீ/எல்எல்டீஎப்/01/23/02 2024 யூன் ஆந் திகதி

தலைவர்

உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்

உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 மறுப்பு அபிப்பிராயம்

உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 09 இன் பிரகாரம் இழப்பீடு பெறுமதி கணிப்பிடுவதற்காக கவனத்திற்கொள்ளப்படுகின்ற கடன் மீதி மற்றும் 2021 மற்றும் 2022 இன் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கடன் மீதிகளுக்கும் இடையே முறையே ரூபா 196,097,689 மற்றும் ரூபா 227,896,243 ஆக வேறுபாடுகள் காணப்பட்டதன் காரணமாக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்களுக்காக கணிப்பிடப்பட்ட இழப்பீட்டு சீராக்கங்கள் முறையே ரூபா 230,284,678 இலாபம் மற்றும் ரூபா 761,798,206 நட்டம் உள்ளடக்கப்பட்டு மீண்டும் சீராக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட கணக்குகளில் சரியானதன்மை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக கடன் இழப்பீட்டு சீராக்கத்தின் போது கடன் மற்றும் பெற வேண்டிய பெறுமதி, காலப் பகுப்பாய்வு அறிக்கையின் மீதிகளைவிட ரூபா 770,172,169 அதிகரித்து பயன்படுத்தப்பட்டமையால் ரூபா 167,561,679 ஆன இழப்பீட்டு பெறுமதியில் சரியான தன்மை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 07 இன் பிரகாரம் இழப்பீட்டு நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தமையை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட குறிகாட்டிகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.

(இ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 09 இன் பிரகாரம் ரூபா 76,852,323 ஆன பெறவேண்டிய வட்டி பெறுமதி காலக் கழிவுக் கிரயத்தில் சேர்க்கப்பட்டு காண்பிப்பதற்கு பதிலாக ஏனைய சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை செயற்திறனாக்கும் நோக்கில் அபிவிருத்தி செய்யப்பட்ட மொபைல் எப் மென்பொருளின் பெறுமதி ரூபா 2,437,425 இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் கற்பனைச் சொத்தாக சமர்ப்பிக்கப்படாமல் கணனி மென்பொருளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24 இன் பிரகாரம் பிரதான முகாமைத்துவ தரப்பு ஊழியம் நிதிக் கூற்றில் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களின் கீழ் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் நிறுவனத்தில் முன்னாள் பதிற் கடமைப் பணிப்பாளர் மற்றும் தற்போதைய பணிப்பாளருக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,179,488 ஆன நலன்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஊ) 04 கடன் வகைகளுக்குரிய கடன் மற்றும் பெற வேண்டிய மீதிகள் உள்ளடக்கப்பட்ட மூலதனம் மற்றும் தொங்கல் வட்டி ரூபா 1,472,085,856 ஆக இருந்த போதும் பட்டோலைகளில் அது ரூபா 1,444,252,401 ஆனமையால் அதற்கிடையே ரூபா 27,833,455 வேறுபாடு காணப்பட்டது.

(எ) மீளாய்வாண்டின் போது 04 நிச்சயமற்ற வட்டி கணக்குகளில் ரூபா 59,718,232 குறைத்துக் காண்பிக்கப்பட்டமை மற்றும் 02 நிச்சயமற்ற வட்டி கணக்கில் ரூபா 1,607,963 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமை மற்றும் தேறிய விளைகளில் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்த போதும் அந்த சீராக்கங்களுக்கு உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஏ) கடந்த ஆண்டில் நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டதன் தவறை சரிசெய்யாமையின் காரணமாக மீளாய்வாண்டில் நிலையான வைப்பு வட்டி ரூபா 14,015,293 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் வருமான வரி செலவினம் ரூபா 51,270,726 ஆக இருந்த போதும் அது ரூபா 36,688,054 ஆக விரிவான வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக வருமான வரி செலவினம் ரூபா 14,582,672 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் போது முதலீட்டு வருமானத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்ட முற்பண வருமான வரி ரூபா 7,021,065 ஆக இருந்த போதிலும் அதில் ரூபா 2,190,461 முன்னைய ஆண்டிற்குரிய வருமான வரி செலுத்தும் போது குறைக்கப்பட்டு ரூபா 4,830,604 ஏனைய சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ரூபா 4,830,604 இனால் செலுத்த வேண்டிய வருமான வரி தொகை மற்றும் ஏனைய சொத்துக்கள் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிற்போட்ட வரி பொறுப்புக்கள் ரூபா 326,265 ஆக இருந்த போதிலும்

அது ரூபா 7,881,953 தொகை பிற்போட்ட வரிச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக பிற்போட்ட வரி செலவினமாக ரூபா 7,530,191 கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் ரூபா 25,496 பிற்போட்ட வரி வருமானமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒள) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 7,736,650 கணனி மென்பொருள் மற்றும் உபகரணங்களுக்குரிய பெறுமானத் தேய்வு ரூபா 1,407,877 ஆக இருந்த போதும் அது ரூபா 5,412,576 ஆக ரூபா 4,004,699 அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(க) கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் மானியங்களில் இருந்து பெறப்பட்ட சொத்துக்களுக்காக மானிய காலக் கழிவு பெறுமதி ரூபா 2,397,630 ஆக இருந்த போதும் அது ரூபா 6,397,057 ஆக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 3,999,418 இனால் ஏனைய செயற்பாட்டு வருமானம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சல் ரூபா 226,560,800 குறைவாகவும், முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சல் ரூபா 130,126,748 அதிகரித்தும் நிதி செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 96,425,733 குறைத்தும் சீராக்கப்பட்டிருந்தது.

(கி) நிதியத்தின் கடன்பட்டோர் மீதியை உரிய நிறுவனங்களில் நிதிக்கூற்றுக்களின் மீதிகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 192,550,383 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட விபரங்களின் படி நிதி நிலைமைக் கூற்றில், விரிவான வருமானக் கூற்றில், உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட பொருன்மையான விடயங்கள் மாற்றுவழி முறைமையின் மூலம் உறுதிப்படுத்துவதற்கோ அல்லது சான்றுறுதிப்படுத்துவதற்கோ முடியாதிருந்தது. இதன் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்ட பெறுமதி அல்லது விடயங்களின் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத பெறுமதி அல்லது கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எந்தவொரு சீராக்கங்கங்களையும் மேற்கொள்வதற்கு தேவையானதா என தீர்மானிப்பதற்கு முடியாதிருந்தது.

1.3 நிதியத்தின் 2023 இன் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்கு கிடைக்க பெறும் என எதிர்பார்க்கின்ற நிதியத்தின் 2023 இன் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள போதும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என கருதப்படும். ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தும் முடிவுரையினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

நிதியத்தின் 2023 இன் ஆண்டறிக்கையை வாசிக்கும் போது அதன் பொருண்மையான பிழைகள் காணப்படுகின்றமையை நான் முடிவுசெய்தால் அதனைக் கட்டுப்படுத்தும் தரப்பினருக்கு அந்த விடயங்களை சரிசெய்வதற்காக தெரிவித்தல் வேண்டும். மேலும் சரிசெய்யப்படாத பிழைகள் தவறுகளை காணப்படுமாயின் அவற்றை அரசியலமைப்பின் 154(6)

உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தும் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியம் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க பேணிச் செல்லப்படுகின்ற கணக்காய்வு அபிப்பிராயத்தின் அடிப்படையில் நிதியத்தின் நிதி நிலைமைக் கூற்று தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கையை விநியோகித்தல் எனது பொறுப்பாகும். எனினும் அபிப்பிராய மறுப்பிற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட விபரங்களில் உள்ள விடயங்களின் காரணமாக இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை மன்றம் பேணி வந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(ளை) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஸ)(ஈ)(ஸை) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான

அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள (அ), (இ), (ஈ), (ஊ), (ஏ), (ஒ) மற்றும் (கி) பந்திகள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும் வேறு, எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஆணைக்குழுவின் நிர்வாக சபையின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு ஆணைக்குழு சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் உள்ளது என.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது ஆணைக்குழுவின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதிருந்தது என.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க தொகுதியின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் செயற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபையின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக கால எல்லைக்குள் உரிய சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என.

2.3 ஏனைய விடயங்கள்

2017 முதல் 2023 வரை கொண்டுவரப்படுகின்ற ரூபா 3,495,531 ஆன முற்பணக் கணக்குகளின் மீதிகளை மீளாய்வாண்டின் போதும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

விரிவான வருமானக் கூற்று

இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் தயாரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க விரிவான வருமான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

31.12.2023 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மிகைகள் பற்றாக்குறை மற்றும் ஏனைய விவரங்கள் வருமானம் பற்றிய தகவல்கள் விரிவான வருமான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. உண்மையான தகவல்கள் அதாவது 2021 மற்றும் 2022 காலப்பகுதி தொடர்பான ஒப்பீட்டுத்தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின்

விரிவான வருமானக் கூற்று

2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

		2023	2022	2021
			வெளியிடப்பட்ட	வெளியிடப்பட்ட
	குறிப்பு	ரூபா	ரூபா	ரூபா
வட்டி வருமானம்	4	307,142,464	289,204,262	275,545,152
வட்டி வருமானம்	5	109,444,196	113,769,524	126,304,798
தேறிய வட்டி வருமானம்		**197,698,267**	**175,434,738**	**149,240,354**
ஏனைய தொழில்பாட்டு வருமானம்	6	139,346,837	165,600,174	63,434,258
மொத்த தொழில்பாட்டு வருமானம்		**337,045,105**	**341,034,912**	**212,674,612**
வெளியேற்றல் கட்டணங்கள்	13	(167,561,679)	(761,798,206)	230,284,678
தேறிய தொழிற்பாட்டு வருமானம்		**169,483,426**	**(420,763,294)**	**442,959,290**
தனிப்பட்ட செலவுகள்	7	29,386,782	29,388,809	26,846,049
தேய்மானம் -சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	14	7,153,640	1,120,942	1,758,084
அளிப்புகளை கடன் தீர்ப்பு	8	-	29,997,185	74,910,206
ஏனைய தொழிற்பாட்டு செலவுகள்	9	36,512,166	13,995,967	11,900,825
குத்தகைக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்		**96,430,838**	**(495,266,197)**	**327,544,126**
வரிச் செலவுகள்	10	36,688,054	36,418,499	16,237,444
ஆண்டுக்கான இலாபம்		**59,742,784**	**(531,684,696)**	**311,306,682**
ஏனைய விரிவான வருமானம்				
திட்டமிடப்பட்ட நலன்களின்மீது திட்டமிடப்பட்ட உண்மையான நட்டம்		2,188,332	(1,023,134)	(156,388)
பிற்போடப்பட்ட வரிச் செலவுகள்	10	(25,496)	(1,712,928)	3,400,207
மொத்த விரிவான வருமானம்		**57,579,949**	**(528,948,635)**	**314,550,501**

நிதி நிலைமைக் கூற்று

இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் தயாரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதி நிலைமைக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. 2023.12.31இல் உள்ளவாறு உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் சொத்துகள், பொறுப்புகள் மற்றும் உரிமைகளுக்கான நிதி நிலைமை கூறறு தயாரிக்கப்பட்டு, சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் உரிமைகள் போன்ற வகைகளில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2021 மற்றும் 2022 காலப்பகுதி தொடர்பான உண்மையான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின்

நிதி நிலைமைக் கூற்று


2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான

		2023	2023 சனவரி 1 வெளியிடப்பட்ட	2022 சனவரி 1 வெளியிடப்பட்ட
	குறிப்பு	ரூபா	ரூபா	ரூபா
சொத்துக்கள்				
காசு மற்றும் அிற்கு சமமானவைகள்	11	96,667,455	121,162,801	86,751,731
வங்கி மீதி	12	685,058,333	598,000,000	948,000,000
கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகள்	13	2,865,193,520	3,150,830,065	3,684,854,519
சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	14	7,088,731	1,830,898	2,908,640
பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள்	17.1	7,881,953	7,856,456	6,143,529
ஏனைய சொத்துக்கள்	15	103,535,383	99,691,917	109,801,288
மொத்த சொத்துக்கள்		**3,765,425,374**	**3,979,372,136**	**4,838,459,706**
உரிமைகள் மற்றும் பொறுப்புகள்				
பொறுப்புகள்				
வட்டியுடன்கூடிய கடன் பெறுதல் மற்றும் திறைசேரியிடம் செலுத்தப்பட வேண்டியவை	16	4,015,006,605	4,263,982,469	4,590,440,319
தற்கால வரி பொறுப்பு	17	36,688,054	36,418,499	16,237,444
பிற்போடப்பட்ட வரி பொறுப்பு	17.1	-	-	-
பின்நிலை- வேலைவாய்ப்பு நலன்களின் பொறுப்புகள்	18	8,249,612	4,853,000	5,912,476
ஏனைய பொறுப்புகள்	19	48,345,271	7,811,220	32,900,492
மொத்த பொறுப்பு		**4,108,289,542**	**4,313,065,189**	**4,645,490,731**
உரித்துக்கள்				
பிடிபணமாக வைக்கப்பட்ட				

உழைப்புகள்			
மொத்த பொறுப்புகளின் உரித்துகள்	-342,864,168	-333,693,053	192,968,975
பொறுப்புகள்	**3,765,425,374**	**3,979,372,136**	**4,838,459,706**
பிடிபணமாக வைக்கப்பட்ட உழைப்புகள்			

இந்த நிதிக் கூற்றுகள் இலங்கை தரநியமக் கணக்கீட்டு கொள்கைகளுக்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதன்மூலம் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் உண்மையான நடவடிக்கைகள் தொடர்பாக நியாயமான உண்மையான நிலைமையையும், அதன் இறுதி காலப்பகுதியில் மிகையும் பிரதிபலிப்பதாக உறுதிப்படுத்தப்படுகிறது.






கே. சித்ரபால
கே.ஏ.டீ.டீ.கஹந்தவல்

பிரதான நிறைவேற்றலுவலர் பிரதி பணிப்பாளர் (நிதி மற்றும் நிருவாகம்)

மேற்படி நிதி கூற்றுகள் தயாரித்து சமர்ப்பிக்கப்படுதல் தொடர்பாக ஆணையாளர் சபை பொறுப்பு கூறும். ஆணையாளர் சபையின் பொருட்டு கையொப்பமிடப்பட்டது;





பிரதீப் யசரத்ன கே.பீ.எல்.ஏ. காரியவசம்

தலைவர் திறைசேரியின் பிரதிநிதியாளர்

காசுப் பாய்ச்சல் கூற்று

இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் தயாரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதி நிலைமைக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. 2023.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல், தொழிற்பாட்டு செயற்பாடுகள், முதலீட்டு செயற்பாடுகள், நிதியீட்ட செயற்பாடுகளின் பிரகாரம் வகைப்படுத்தல் மூலம் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் காசுப் பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டது

.

உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் காசுப் பாய்ச்சல் கூற்று 2023.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான			
		2023	2022 வெளியிடப்பட்ட
	ரூபா	ரூபா	ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகள் மூலமான காசுப் பாய்ச்சல்			
வரிக்கு முன்னரான இலாபம்		**96,430,838**	**(495,266,197)**
சீராக்குதல்			
தேய்மானம் மற்றும் கடன் தீர்ப்பு		7,153,640	31,118,127
வலுக்குறை கட்டணங்கள்		167,561,679	761,798,206
அளிப்பு – கடன் தீர்ப்பு வருமானம்		(7,346,384)	(443,541)
ஏனைய வருமானங்கள்		-	-
பணிக்கொடை மற்றும் திரண்ட செலவினம்		1,330,950	1,217,798
வட்டி செலவினம்		109,444,196	113,769,524
முதலீட்டு வருமானம்		(122,293,513)	(151,743,746)
செயற்பாட்டு மூலதனத்திற்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்		**252,281,407**	**260,450,170**
ஏனைய சொத்துக்கள் (அதிகரித்தல்/குறைதல்)		(23,703,324)	(34,169,649)
ஏனைய பொறுப்புகள் (அதிகரித்தல்/குறைத்தல்)		1,854,462	13,384,834
தொழிற்பாடுகள்மூலம் உழைக்கப்பட்ட பணம்		**230,432,545**	**239,665,355**
முன் கொண்டு வரப்பட்ட தேறிய கடனாளிகள்		(164,726,278)	(208,013,573)
செலுத்தப்பட்ட வரி		(43,393,781)	(13,917,809)
செலுத்திய பணிக்கொடை		-	(1,052,973)
தொழிற்பாட்டு செயற்பாடுகள் மூலம் உழைக்கப்பட்ட (பயன்படுத்திய) தேறிய பணம்		**22,312,485**	**16,681,000**
முதலீட்டு செயற்பாடுகள் மூலம் கிடைக்கப்பெற்ற காசுப் பாய்ச்சல்	10		
கொள்வனவுகள்- சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்		(11,531,325)	(43,199)
கொள்வனவுகள்- சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன விற்பனை மூலம் முன்கொண்டு வரப்பட்டவை			
புலனாகாத சொத்துக்கள் தேறிய கொள்வனவுகள்		-	-
தேறிய முதலீடுகள்		87,058,333	350,000,000

பெற்ற முதலீட்டு வருமானம்		103,285,392	107,995,643
முதலீட்டு செயற்பாடுகள்மூலம் உற்பத்தி செய்யப்பட்ட(பயன்படுத்திய தேறிய பணத் தொகை)		**178,812,400**	**457,952,443**
நிதி செயற்பாடுகள் மூலம் கிடைக்கப்பெற்ற நிதி ஓட்டம்			
செலுத்திய வட்டிச் செலவு		(261,994,327)	(440,222,374)
தேறிய கடன் பெறுதல்			
நிதி செயற்பாடுகள்மூலம் உருவாக்கப்பட்ட(பயன்படுத்திய தேறிய பணத் தொகை)		(261,994,327)	(440,222,374)
காசும் காசுக்க சமமானவைகளில் தேறிய அதிகரித்தல்(குறைத்தல்)		**(60,869,441)**	**34,411,070**
ஆண்டு ஆரம்பத்தில் பணமும் பணத்திற்கு சமமானவைகளும்		121,162,801	86,751,731
ஆண்டு இறுதியில் பணமும் பணத்திற்க சமமானவைகளும்		**60,293,360**	**121,162,801**
வங்கி மேலதிகப் பற்று மீதி	11	96,667,455	121,162,801
	19	(36,374,095)	-
Overdraft balance with bank		**60,293,360**	**121,162,801**

உரிமை மாற்றங்கள் கூற்று

இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் தயாரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உரிமை மாற்றங்கள் கூற்று பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்		
உரிமை மாற்றங்கள் கூற்று		
2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான		
	நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புகள்	**மொத்த உரித்துகள்**
	ரூபா	**ரூபா**
2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி	(37,315,702)	(37,315,702)
வெளியிடப்பட்ட சீராக்குதல்	230,284,678	230,284,678
	192,968,976	**192,968,976**
2022 சனவரி 01 ஆம் திகதியில்	192,968,976	192,968,976
உரித்துகள் சீராக்கல்	2,286,606	2,286,606
ஏனைய வருமானம்	2,736,062	2,736,062
மீள் வெளியிடப்பட்ட நட்டம்	(531,684,696)	(531,684,696)
2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி	**(333,693,053)**	**(333,693,053)**
2023 சனவரி 01 ஆம் திகதியில்	(333,693,053)	(333,693,053)
உரித்துகள் சீராக்குதல் 2023	(66,751,063)	(66,751,063)
ஆண்டுக்கான வருமானம்	59,742,784	59,742,784
ஏனைய வருமானம்	(2,162,836)	(2,162,836)
2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி	**(342,864,168)**	**(342,864,168)**

நிதிக் கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள்

கணக்கீட்டு கொள்கைகள்

1. அறிக்கையிடுகின்ற நிறுவனம்

1.1 பொதுவான தகவல்கள்

உள்;ர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதயம் என்பது (உ.க. மற்றும் அபி.நிதி) 1916 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க உள்;ர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கட்டளைச் சட்டம்மூலம் தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனமாகும். அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலங்கையில் இலக்கம் 24, வோட் ப்ளேஸ், கொழும்பு 07 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

1.2 பிரதான பணிகள் மற்றும் தொழிற்பாடுகளின் இயல்பு

குறித்த நிதியத்தின் பிரதான பணி யாதெனில், பொது வசதிகளின் பொருட்டு உள்ளுர் அதிகார சபைகளுக்கு கடன் வசதிகளை ஏற்பாடு செய்தலாகும். உள்ளுர் கடன் அபிவிருத்தி நிதியத்தின் குறிக்கோள் யாதெனில், உள்ளுர் மட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளின் பொருட்டு நிதியிடல் மேற்கொள்கின்ற முன்னோடி நிறுவனமாகுதலாகும்.

2. தயாரிக்கும் அடிப்படை

2.1 இணைப்பதற்கான அடிப்படை

உள்ளுர் கடன் அபிவிருத்தி நிதியம், நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்பு கருத்திட்டம், பல்லாண்டு பயிர்ச் செய்கை அபிவிருத்தி கருத்திட்டம் மற்றும் உள்;ராட்சி உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்டம் என்பவற்றின் உப பணிகளாக நேரடி வருமானம் மற்றும் செலவினம் வெவ்வேறாக செயற்படுத்தி, ஆண்டு இறுதியில் இணைக்கும் பகுதிகளை அடையாளம் காணப்படும். சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் என்பனவும் ஐந்தொகையில் சேர்க்கப்படும

2.2 திருத்தப்பட்ட கூற்றுக்கள்

நிதியத்தால் திசெம்பர் 31 இல் முடிவடைந்த 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக முன்னர் அறிக்கையிடப்பட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதற்குரிய சகல குறிப்புக்களும் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. நிதியத்தின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களை மீண்டும் வெளியிடல் முகாமைத்துவத்தால் முன்னர் இனங்காணப்பட்ட சகல வழுக்களினதும் சரிசெய்தல்களை உள்ளடக்கிய நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்கு அறிக்கைகள் உள்ளக மீளாய்வின் பின்னர் மேற்கொள்ளப்பட்டது. தாக்கத்திற்கு உட்பட்ட ஒவ்வொரு நிதிக்கூற்றுக்களின் வரிசை விடயங்கள் முன்னைய காலப்பகுதிக்காக மீண்டும் தயாரித்தமையால் வழுக்கள் சரிசெய்யப்பட்டுள்ளது.

2.3 செயலூக்கமிக்க மற்றும் சமர்ப்பித்தல் பணம்

திரட்டிய இலங்கை ரூபா மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், எல்லா பெறுமதிகளையும் ஏனைய வகையில் காட்டப்படாத சந்தர்ப்பங்களில் அண்மித்த ரூபாவிற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

2.4 உடன்பாடு தொடர்பான கூற்று

நிதி நிலைமை கூற்று, விரிவான வருமான கூற்று, பங்குச் சந்தையின் மாற்றங்கள் தொடர்பான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதி கூற்றுகளுக்கான குறிப்புகள் ஆகிய ஆவணங்களில், நிதியத்தின் நிதி கூற்று கொண்டமைந்துள்ளதுடன், அவை இலங்கை பட்டயம் பெற்ற கணக்காய்வு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது. (SLFRSs and LKASs)

2.5 நிதி கூற்றுகள் தொடர்பான பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுகளை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரித்தல் மற்றும் முன்னிலைப்படுத்தல் தொடர்பில் ஆணையாளர் சபை பொறுப்பு கூறுதல் வேண்டும். இப் பொறுப்பில் பின்வருவன உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகளின் காணரமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளிலிருந்து விடுப்பட்ட கூற்றுகளை தயாரித்தல் மற்றும் நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பேணுதல்.

2.6 ஆணையாளர் சபையால் நிதி கூற்றுகளை அங்கீகரித்தல்

2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக நிதியத்தின் நிதி கூற்றுகள் 2024 ஆம் ஆண்டு பெப்ருவரி 27 ஆந் திகதி ஆணையாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

2.7 அளவீடுதலுக்கான அடிப்படை

நிதி நிலைமை தொடர்பான கூற்றில் குறிப்பிடப்படும் பின்வரும் பொருட்களுக்கான உருப்படிகளை தவிர்ந்த நிதியத்தின் நிதி கூற்றுகள் வரலாற்று செலவுகளை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

உருப்படிகள்	அளவவிடுதலுக்கான அடிப்படை
வரைவிலக்கணம் மேற்கொண்ட நலன்களின் கடப்பாடுகள்	திட்டமிடப்பட்ட சொத்துக்களில் நியாயமான பெறுமதியைக் கழிக்கப்பட்ட பின்னர், வரைவிலக்கணம் செய்யப்பட்ட நலன்களின் கடப்பாடுகளில் தற்கால பெறுமதியை அடையாளம் காணுதல்

2.8 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

கணக்கீட்டு கொள்கைகளை பயன்படுத்தல் மற்றும் சொத்துக்கள், பொறுப்புகள் வருமானம், செலவுகளில் அறிக்கையிடப்பட்ட அளவுகளுக்கு ஏதுவாக அமையும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானிப்புகள் என்பவற்றை தயாரிப்பதற்கு முகாமைத்துவத்திற்கு தேவைப்படுகின்ற, இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமையும் வகையில் நிதியத்தின் நிதிக் கூற்றுகளை தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த மதிப்பீடுகளுக்கும் பார்க்க உண்மையான பெறுபேறுகள் வேறுபடலாம். முன்னரான காலவெல்லைக்கு ஏற்புடையதாக அறிக்கையிடப்பட்ட சில எண்களை செவ்வையாக்கும் நோக்கில் மீண்டும் வெளியிடப்பட்டுள்ளது. மதிப்பீடுகள் மற்றும் முக்கியமான அனுமானிப்புகள் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றது. மதிப்பீடுகள் திருத்தம் செய்யப்படுகின்ற மற்றும் எதிர்கால காலவெல்லைக்குள் கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பான திருத்தங்கள் அடையாளம் காணப்படுகின்றது. மதிப்பீடுகள் மேற்கொள்கின்ற முக்கியமான பகுதிகள், நிதியத்தில் நிதி கூற்றுகளில் அடையாளம் காணப்படும் அளவுகளுக்கு அதிகூடிய தாக்கங்களை ஏற்படுத்தும் கணக்கீட்டு கொள்கைகளை பயன்படுத்தும்போது நிகழத்தக்க நிலைமைகள் மற்றும் தீர்வுகள் பின்வருமாறாகும்.

2.8.1. தொடர்ச்சியான நிலைப்பாடு மற்றும் கணக்கீட்டு அடிப்படை

தொடர்ச்சியான அடிப்படையில் நடைமுறைப்படுவதற்காக நிதியத்திற்குள்ள ஆற்றல் தொடர்பாக ஆணையாளர் சபையால் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், எதிர்வுகூறப்பட்டுள்ள இனிவரும் காலப் பகுதியில் அதற்கு தொடர்ச்சியான வியாபார நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்கு போதியளவிலான வளங்கள் உள்ளதாக சபை

திருப்தியடைந்துள்ளது. மேலும் தொடர்ச்சியான அடிப்படையில் நிதியம் நடைமுறைப்படுவதற்கு முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்த முடியுமான எதுவித பொருட்களுடனான நிகழத்தக்க நிலைமை பற்றி சபை அறியப்பட மாட்டாதென்பதுடன். நிதியத்தின் தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு அல்லது மூடுவதற்கு அவர்கள் எதிர் பார்க்கவில்லை. ஆகையால் நிதியத்தின் நிதி கூற்றுகளின் தொடர்ச்சியான நிலைமை தொடர்பான அடிப்படையில் தொடர்ச்சியாக தயாரிக்கப்படும்.

2.8.2. வரியிடல

நிதியம் வருமான வரிக்கு உட்படுவதுடன், குறித்த நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் சந்தர்ப்பமாகும்போது ஏற்புடையதாகும் வரி சட்டங்கள் தொடர்பான வரைவிலக்கணத்திற்கு அமைவாக நிலவும் நிகழத்தக்க நிலைமை காரணமாக தற்கால, பிற்போடுதல் மற்றும் ஏனைய வரி நிருணயித்தலுக்கு தீர்வு தேவைப்படுகின்றது.

2.8.3. வேலைவாய்ப்புக்குப் பின் நலன்களின் பொறுப்பு

எதிர்வுகூறப்பட்ட அலகு கடன் முறையை பயன்படுத்தி ஆண்டின் வேலை வாய்ப்புகளுக்குப் பின் நலன்களின் பொறுப்பு மற்றும் ஏற்புடைய கட்டணங்கள் தீர்மானிக்கப்படும். மதிப்பீட்டு முறை, சலுகை விகிதாசாரம், எதிர்கால சம்பள அதிகரிப்பு, இறப்பு விகிதாசாரம் என்பன தொடர்பாக அனுமானிப்புகளுடன் தொடர்புபடும். குறித்த பொறுப்புகளில் நீண்டகால தன்மை மீது இந்த மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிகழத்தக்க நிலைமைகளுக்கு உட்படும். ஒவ்வொரு பதிவுகளின் காலவெல்லைக்கும் எல்லா அனுமானிப்புகளையும் மீளாய்வு செய்யப்படும்.

2.8.4. சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பயன்பாட்டு ஆயுட் காலம்

ஒவ்வொரு பதிவுத் திகதியிலும் நிதியம், சொத்துக்களின் மீதி பெறுமதிகள், பயன்பாட்டு ஆயுட் காலம், தேய்மான முறை தொடர்பாக ஆய்வு செய்கின்றது. குறித்த பெறுமதிகள், விகிதாசாரங்கள், முறைகள் என்பவற்றை மதிப்பிடுகையில் முகாமைத்துவத்தின் தீர்ப்புகளை பயன்படுத்துவதுடன், ஆகையால் அவை நிகழத்தக்க நிலைமைக்கு உட்படுகின்றது.

2.9. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் அடையாளம் காணப்படும்.

2.9.1. வரியிடல்

இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் - LKAS 12 (வருமான வரி) படி, தற்கால மற்றும் பிற்போடப்பட்ட வரியிடல் தொடர்பிலான காலப் பகுதிக்கு இலாபங்கள் அல்லது நட்டங்கள் தீர்மானிக்கும்போது உள்ளடக்கும் தொகையின் மொத்தமானது,வரி செலவாகும். உரித்துகளில் நேரடியாக அடையாளம் காணப்படும் உருப்படிகள் அல்லது உரித்துகள் அல்லது ஏனைய விரிவான வருமானங்களுள் அடையாளம் காணப்படும் சந்தர்ப்பங்களில் ஏனைய விரிவான வருமானம் வரை ஏற்புடையதாகும் அளவு தவிர்ந்த வரி செலவு விரிவான வருமானக் கூற்றில் வருமான வரி செலவாக அடையாளம் காணப்படும்.

(அ) தற்கால வரி

விதிக்கப்பட்ட வரி விகிதாசாரம் அல்லது வரிச் சட்டம் அல்லது பதிவு செய்தல் திகதியில் கவனிக்கத்தக்கதாக விதிக்கப்படும் மற்றும் முன்னரான ஆண்டுக்கு ஏற்புடையதாக செலுத்தப்பட வேண்டிய வரிகளுக்கு மேற்கொள்கின்ற ஏதேனும் சீராக்கல்களை மேற்கொண்டு, நிலவுகின்ற ஆண்டுக்கு ஏற்புடையதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு அல்லது அவருக்கு செலுத்துவதற்கு எதிர் பார்க்கப்படும் தொகை, தற்கால வரி சொத்துக்களையும் பொறுப்புகளையும் கொண்டமைந்துள்ளது.

அதனடிப்படையில் 2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் நிதி கூற்றுகளில் 10.2 குறிப்பில் விசேடமாக காட்டப்பட்டுள்ள விகிதாசாரங்கள் தொடர்பான திருத்தங்களின்படி வரி அலுவலின் பொருட்டு சீராக்கப்பட்ட இலாபத்தின் மீதான வரிக்கு ஏற்பாடுகள் அளிக்கப்படுகின்றது.

(ஆ) பிற்போடப்பட்ட வரி

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளில் வரி அடிப்படை மற்றும் நிதி அறிக்கையிடல் பணியின் பொருட்டு அவற்றில் முன்கொண்டு வந்த பெறுமதிக்கிடையில், அறிக்கையிடும் திகதியில் நிலவும் தற்காலிக வேறுபாடுகள்மீது பிற்போடப்பட்ட வரி தயாரிக்கப்படும்.

விதிக்கப்பட்டுள்ள அல்லது பதிவு செய்யப்படும் திகதியில் கவனிக்கத்தக்க அளவில் விதிக்கப்படும் சட்டங்களை அடிப்படையாகக்கொண்டு, தற்காலிக மாற்றங்களை மீண்டும் பற்று வைக்கும் சந்தர்ப்பத்தில், தற்காலிக வேறுபாடுகளுக்கமைவாக எதிர் பார்க்கப்படும் வரி விகிதாசாரம்படி பிற்போடப்பட்ட வரி அளவிடப்படும்.

